**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 02.01.2025

**அசல் வழக்கு எண் 44/ 2022**

**வா.சா.**1 **- வரதராஜ்,**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

நீங்கள் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து தான் கையொப்பம் போட்டீர்கள் என்றால் சரிதான். உங்கள் தந்தை பெயர் சிங்காரவேலு உங்கள் தாத்தா பெயர் துரைசாமி கவுண்டர் என்றால் சரிதான். உங்கள் தாத்தா துரைசாமி கவுண்டருக்கு மூன்று பிள்ளைகள் என்றால் சரிதான். உங்கள் தந்தை சிங்காரவேலு இரண்டாவதாக பொன்னுரங்கம் மூன்றாவதாக சோமசுந்தரம் ஆகிய மூன்று பிள்ளைகள் என்றால் சரிதான். உங்களுடைய தாத்தா துரைசாமி கவுண்டரும் அவரது மூன்று பிள்ளைகளும் கூட்டு குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். ஆரம்பத்தில் அவ்வாறு வசித்து வந்தார்கள். ஆரம்பத்தில் என்றால் சுமார் **50, 60** ஆண்டுகளுக்கு முன்பாக இருக்கும். துரைசாமி கவுண்டருக்கு பூர்வீக சொத்துக்கள் ஏதேனும் இருந்ததா என்றால் எதுவுமில்லை. துரைசாமி கவுண்டருக்கு **18** சென்ட் இருந்தது என்று சொன்னால் அது அவருடைய அப்பா சம்பாதித்ததாக எனக்கு சொன்னார்கள். துரைசாமி கவுண்டர் மேற்படி **18** சென்ட் ஆதரவாக ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் மூன்று பிள்ளைகளை விட்டுவிட்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். துரைசாமி நாயக்கர் இறந்த பிறகு உங்கள் அப்பா சிங்காரவேலு மூத்த மகன் என்ற அடிப்படையில் சொத்துகளை பராமரித்து வந்தார் என்றால் சரிதான். அப்பொழுது மூன்று பாகமாக பிரித்து கொடுத்துவிட்டார்கள். உங்கள் அப்பாவுக்கு நீங்கள் எத்தனை பிள்ளைகள் என்றால் நாங்கள் மூன்று ஆண், மூன்று பெண் பிள்ளைகள் இருக்கிறோம். உங்களுடன் உங்கள் தம்பி சண்முகம் மற்றும் மோகன் ரங்கம் இருவர் இருக்கிறார்கள் என்றால் சரிதான். உங்கள் சகோதரிகள் கலைவாணி மகேஸ்வரி விஜயலட்சுமி ஆகிய மூன்று சகோதரிகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். உங்களுடைய தந்தையும் அவரது சகோதரர்களும் வாய்மொழியாக பாகப்பிரிவினை எப்பொழுது பிரித்துக் கொண்டார்கள் என்றால் சுமார் **1980** ஆம் ஆண்டு வாக்கில் பிரித்துக் கொண்டார்கள். **1968** ஆம் ஆண்டு தான் பாகம் பிரித்துக் கொண்டார்கள் நீங்கள் தவறுதலாக **1980** ல் பிரித்துக் கொண்டதாக கூறுகிறீர்கள் என்றால் சரியில்லை. பாகப்பிரிவினையில் உங்கள் தந்தைக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்னவென்றால் சர்வே நம்பர் **1052** ல் **92** சென்ட், சர்வே நம்பர் **1051** ல் **38** சென்ட் , சர்வே நம்பர் **1012** ல் **12** சென்ட், சர்வே நம்பர் **1013** ல் **23** சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் சோமசுந்தரத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. அதே போல் சித்தப்பா

பொன்னுரங்கம் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் எந்த வருடம் பிறந்தீர்கள் என்றால் **1957-**இல் நான் பிறந்தேன். தற்பொழுது உங்களுடைய வயது என்ன என்றால் **67** ஆகும். இந்த வழக்கில் மூன்று கிரைய பத்திரங்கள் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் எங்கள் அப்பா இறந்து பத்து ஆண்டுகள் பிறகு தான் தெரிந்து கொண்டேன். வழக்கில் நீங்கள் தாக்கல் செய்த மூன்றாவது ஆவணம் பாகப்பிரிவினை பத்திரம் நீங்களும் உங்களுடைய தாயார் மற்றும் சகோதர சகோதரிகள் செய்து கொண்டது என்றால் சரிதான். உங்கள் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் இருந்து கிடைத்த வருவாயைக் கொண்டுதான் மற்ற சொத்துக்களை கிரயம் வாங்கினார் என்றால் சரியில்லை எங்கள் தகப்பனார் ஒரு விவசாயி மற்றும் சவுக்கு வியாபாரி அந்த வருமானத்தில் கிடைத்த பணத்தைக் கொண்டுதான் மற்ற சொத்துக்களை கிரயம் வாங்கினார். வழக்கில் நீங்கள் தாக்கல் செய்த ஆவணங்கள் ஒன்று, இரண்டு, பத்து ஆகியவை **1961** க்கு முன்பு கிரயம் பெற்ற பத்திரங்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களில் கிடைத்த வருமானத்தைக் கொண்டும் அவருடைய சகோதரர்களுடைய உழைப்பில் இருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டும் பணத்தைக் கொண்டும் உங்கள் அப்பா கூட்டு குடும்ப தலைவர் என்கிற முறையில் கிரயம் பெற்றது என்றால் சரியில்லை. உங்கள் அப்பா ஆயிரத்து **1985** ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். உங்கள் அப்பா இறந்து பத்து ஆண்டுகள் கழித்து இந்த பத்திரங்களை வாங்கி பார்த்தீர்கள் என்று சொல்லி உள்ளீர்கள் ஆகவே **1995** இல் பத்திரத்தை வாங்கி பார்த்தீர்களா என்றால் **2005** ல் தான் பத்திர நகல் வாங்கி பார்த்தேன். நீங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்த பத்திரங்கள் **2020** இல் தான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாங்கி உள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி பத்திரங்கள் எவ்வளவு தொகை கொடுத்து கிரயம் எழுதப்பட்டது என்கிற விவரம் தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. பிரதிவாதிகள் உங்களுடைய சித்தப்பா சோமசுந்தரம் அவர்களுடைய பிள்ளைகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள ஏசெட்யூல் சொத்துக்கள் உங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று இந்த நீதிமன்றத்தில் கூறுகிறீர்கள் என்றால் சரிதான் அந்த சொத்துக்கள் மேற்படி மூன்று ஆவணங்கள் வாயிலாக உங்களுக்கு கிடைக்கப்பெற்றது என்று கூறுகிறீர்கள் என்றால் சரிதான். இந்த சொத்துக்களுக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்று தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் பட்டா தாக்கல் செய்யவில்லை. பட்டா வாங்கவில்லை. அனைத்தும் கூட்டு பட்டாவாக உள்ளது. கூட்டு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரிலும் கிருஷ்ணன் ராதாகிருஷ்ணன் அன்பு ஆகிய நால்வர் பேரிலும் உள்ளது ஆகவே நான் பட்டா தாக்கல் செய்யவில்லை. இதுவரை உங்கள்

பெயரிலோ சிங்காரவேலு பெயரிலோ தனிப்பட்ட வழங்கப்படவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு வாய்மொழியாக பாகம் குறி வந்தது **1968** என்று தெரியும் ஆனால் வழக்கிற்காக **1980** இல் பாகம் பிரித்துக் கொண்டதாக தவறாக கூறுகிறீர்கள் என்றால் சரியில்லை. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் ஒன்று இரண்டு பத்து ஆகியவை அசல் ஆவணங்கள் எங்கு உள்ளது என்றால் என் அம்மா வைத்திருந்தார்கள். அந்த அசல் ஆவணங்கள் யாரிடம் உள்ளது என்று தேடிப் பார்த்தீர்களா தேடிப் பார்க்கவில்லை அது எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. **1980** இல் ஏற்படுத்தப்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் உங்கள் அப்பா பெயரில் இருந்த சொத்துக்களை தான் உங்கள் அப்பாவுக்கு ஒதுக்கினார்கள் என்றால் சரியில்லை. தாவா சொத்திற்கு உங்கள் அப்பா பெயரில் தனிப்பட்ட பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். பி ஷெட்யூல் சொத்துக்கள் சோமசுந்தரம் பெயரில் பட்டா வந்தது உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். சோமசுந்தரம் இருக்கிறாரா என்றால் அவர் இறந்து விட்டார். அவர் காலமான பிறகு அவரது பிள்ளைகளான பிரதிவாதிகள் பெயரில் பட்ட வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் பெயரிலும் அவரது தகப்பனார் பெயரிலும் வழங்கப்பட்ட தனிப்பட்ட பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது கூட்டு பட்டா எண் **645** மற்றும் **656** ஆகும். **1988** இல் வழங்கப்பட்ட பட்டா பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்பட்டது. சோமசுந்தரம் பெயரில் பட்டா வழங்கப்பட்டது பின்னர் அதனை பிரதிவாதிகள் பெயரில் மாற்றிக் கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா ஏ ஷெடியூல் சொத்தில் பொன்னுரங்கம் மகன் முருகேசன் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். ஒரு பகுதி வழங்கப்பட்டது. முருகேசன் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண் தெரியுமா என்றால் பட்டா எண் தெரியாது. பொன்னுரங்கம் வகையறாவில் உள்ள நபர்கள் மீது வழக்கு போடவில்லை என்றால் சரியில்லை வழக்கு தொடர்ந்து உள்ளேன் வழக்கு எண் தெரியுமா என்றால் மறந்துவிட்டது. உத்திரமேரூரில் நீங்கள் தாக்கல் செய்த இரண்டு வழக்குகளில் பொன்னுரங்கம் மகன் முருகேசன் என்பவரை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அந்த வழக்கு நான் தாக்கல் செய்யவில்லை. அந்த வழக்கு யார் தாக்கல் செய்தது என்றால் பிரதிவாதிகள் தான் தாக்கல் செய்தார்கள் அவர்கள் என் பெயரில் அந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். பொன்னுரங்கம் அவரது வாரிசுகளை அந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தாவா சொத்துக்களை பிரதிவாதிகளுக்கு குத்தகை விட்டதாக கூறியுள்ளீர்கள். குத்தகை பத்திரம் மற்றும் வாடகை பத்திரம் எழுத்துப்பூர்வமாக எழுதப்பட்டதா என்றால் எழுதப்படவில்லை. குத்தகை விட்டது என்று காட்டுவதற்கு எழுத்துப்பூர்வமான ஆவணங்கள் எதுவும் இல்லை எல்லாம் வாய்மொழி பேச்சு தான் என்றால் சரிதான். **1961** ஆம் ஆண்டு முதல் நாங்கள் குத்தகைக்கு விட்டுள்ளோம். குத்தகைக்கு

விட்ட விவரம் யார் சொல்லி தெரிந்து கொண்டீர்கள் என்றால் என் அப்பா சொல்லித் தெரிந்து கொண்டேன். அவர் இறப்பதற்கு முன்பு என்னிடம் குத்தகைக்கு விட்டுள்ளதாக சொன்னார். வாடகை பெற்றதற்கு எந்தவிதமான ஆதாரமும் ஆவணமும் உங்களிடம் இல்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களை வாடகைக்கு விட்டுள்ளதால் காலி செய்ய வேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். தாவா பி ஷெடுல் சொத்துக்களில் என்ன பயிர் வைத்துள்ளார்கள் தெரியுமா என்றால் நெல்லு வேர்க்கடலை சவுக்கு ஆகிய பயிர்கள் வைத்துள்ளார்கள். அடங்கல் காப்பி தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. வருவாய் ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விட்டீர்களா என்றால் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேத்துப்பட்டு பெருநகர் ஊர்களில் உள்ள சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டீர்கள் என்றால் பிரித்துக் கொண்டோம். **2002** ஆம் ஆண்டு பிரித்துக் கொண்டோம். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள ஏ செட்யூல் சொத்துக்களை சேர்த்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் நீங்களும் உங்கள் தாயாரையும் உங்கள் சகோதரர்களும் சேர்ந்து எழுதிக் கொண்டது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் உங்களுக்கு பி ஷெடுல் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்கள் அப்பாவுக்கு வாய்மொழியாக பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்தை தான் உங்களுக்கு பி செட்யூல் சொத்தாக கொடுத்தார்கள் என்றால் சரிதான். சர்வே எண் **1051** இல் **2002** பாகப்பிரிவினையில் உங்களுக்கு பி ஷெடுயூல் சொத்தில் **38** சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் **1052** இல் **2002** பாகப்பிரிவினையில் உங்களுக்கு பி ஷெடுயூல் சொத்தில் **92** சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் **1012** இல் **2002** பாகப்பிரிவினையில் உங்களுக்கு பி ஷெடுயூல் சொத்தில் **12** சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் **1013** இல் **2002** பாகப்பிரிவினையில் உங்களுக்கு பி ஷெடுயூல் சொத்தில் **23** சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நான்கு அயிட்டம் சொத்துக்களில் உங்கள் சகோதரருக்கு எந்த சொத்து ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். பி ஷெட்யூல் சத்தில் பொன்னுரங்கம் அவரது வாரிசுகளை சேர்க்காமல் தவறுதலாக விட்டுவிட்டதாக வழக்கில் சொல்கிறீர்கள் என்றால் சரிதான். பொன்னுரங்கம் பாகத்தை சேர்க்காமல் விட்ட விவரத்தை எப்போது தெரிந்து கொண்டீர்கள் என்றால் **2020** ல் தெரிந்து கொண்டேன். பாகப்பிரிவினைக்கு பிறகு உங்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டதா அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகளுக்கு பட்டா வழங்கப்பட்டதை தெரிந்து கொண்டு அவ்வாறு வழங்கியது தவறு என்று ஆட்சேபனை ஏதாவது தெரிவித்தீர்களா என்றால் தெரிவிக்கவில்லை

மாவட்ட ஆட்சியரிடம் **2020** ஆட்சேபனை தெரிவித்து கடிதம் கொடுத்தேன். **1987** முதல் **2020** வரை மாவட்ட ஆட்சியரிடம் மற்றும் வட்டாட்சியரிடம் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என்றால் தெரிவிக்கவில்லை. ஆட்சேபனை மனு தாக்கல் செய்தீர்களா அல்லது விசாரணை ஏதாவது நடைபெற்றதா அந்த மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை விசாரணை எதுவும் நடைபெறவில்லை. எதிர்வழக்குரை படித்து பார்த்தீர்களா என்றார் படித்து பார்க்கவில்லை. நீங்கள் குத்தகைக்கு விடவில்லை என்று மறுத்து கூறியுள்ளார்கள் அதைப்பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பி செட்யூல் சொத்திற்கு விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. குத்தகை குறித்து விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். **4,5** பிரதிவாதிகளுக்கு வழக்கு மூலம் என்னவென்று கூறவில்லை என்றால் சரிதான். பிரிவு **80** கீழ் அறிவிப்பு கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை. பட்டா கொடுக்கவில்லை என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆண்டுக்கு குத்தகையாக ரூபாய் ரூ.**20,000/-** என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் வாய்மொழியாகதான் கூறுகிறேன். ரூ.**20,000/-** இல்லை அது ரூ.**40,000/-** ஆகும். நீங்கள் இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரதால் சுவாதீன பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. நீதிமன்றம் கட்டணம் அதிகமாகும் என்பதால் அவ்வாறு கோரவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் பி.ஏ படித்துள்ளீர்கள் என்றால் சரிதான். ஆங்கிலம் நன்கு தெரியும் என்றால் சரிதான். வருவாய் துறையில் பட்டா பாஸ்புக் வழங்கும் முறை தெரியுமா என்றால் தெரியும். வழக்குரையில் இரண்டாவது பரிகாரமாக ஒன்று முதல் மூன்று வரையிலான பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டாவினை உங்கள் பெயருக்கு மாற்றக்கோரி **4, 5** பிரதிவாதிகள் வழங்க வேண்டும் என்று பரிகாரம் கோரியுள்ளீர்கள் என்றால் சரிதான். பட்டா பாஸ்புக் சட்டம் **14** படி அவ்வாறு பட்டா மாற்றம் செய்ய உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உடன்பிறந்த சகோதரிகள் உங்களுக்கு எதிராகவும் உங்கள் சகோதரர்களுக்கு எதிராகவும் பாகப்பிரிவினை கோரி மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் **301/2022** என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் எந்தெந்த சொத்துக்காக சொத்து விவரம் சொல்லி பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் மூன்று அட்டவணை சொத்துக்கும் சேர்த்து பாகம் கோரியுள்ளார்கள். **2002** ஆம் ஆண்டு நீங்களும் உங்கள் சகோதரர்களும் உங்கள் தாயாரும் சேர்ந்து பாகம் பிரித்துக் கொண்ட சொத்துகளில் பாகம் வேண்டும் என்று உங்களுடைய சகோதரிகள் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இருக்கிறார்கள் என்றால் சரிதான். **2002** இல் நீங்கள் பாகம் பிரித்துக் கொண்ட சொத்துக்கு உங்கள் சகோதரிகள் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான் அந்த

விடுதலை பத்திரத்தை பற்றி இந்த வழக்கில் சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லவில்லை. எந்தெந்த சொத்துக்கு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்று காட்டுவதற்கு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் உங்கள் சித்தப்பா சோமசுந்தரத்திற்கு வாடகைக்கு விட்டதாகவும் பின்னர் அதனை அவருடைய மகன்களுக்கு வாடகைக்கு விட்டதாகவும் வழக்கில் கூறுகிறீர்கள் என்றால் சரிதான். முதலில் உங்கள் அப்பா சோமசுந்தரத்திற்கு வாடகைக்கு விட்டார் பின்னர் அவர் இறந்த பிறகு நீங்கள் வாடகைக்கு விட்டீர்கள் என்றால் சரிதான். அவர்தான் வழக்கில் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் ஏற்கனவே வழத்திற்கு முன்னர் **16.10.2020** ல் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளீர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ **5** வழக்கறிஞர் அறிவிப்புக்கு முன்பாக எந்த காலகட்டத்திலும் பிரதிவாதிகள் சுவாதீனம் ஒப்படைக்க சொல்லி கேட்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் உங்களுக்கு பதில் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் தாவா சொத்து உங்களுக்கு சொந்தமானது இல்லை வாடகை கொடுக்க வேண்டியதில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அறிவிப்பு கொடுத்த பின்னரும் விளம்புகை பரிகாரம் கோரமல் சுவாதீன பரிகாரம் கூறியது சரியில்லை என்றால் சரி இல்லை. சுவாதீனம் ஒப்படைக்க மாட்டோம் என்று எந்த வருடம் உங்களிடம் கூறினார்கள் என்றால் **2010** மற்றும் **2012** ஆம் ஆண்டு கூறினார்கள். **2020** ஆம் ஆண்டு நோட்டீஸ் கொடுத்தீர்கள் அதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். **2002** ஆம் ஆண்டு பாகம் பிரித்துக் கொண்டீர்கள் எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாகம் பிரித்துக் கொண்டீர்கள் என்றால் வீட்டில் இருந்த பத்திரத்தை வைத்து பிரித்துக் கொண்டோம். அதில் உங்கள் சகோதரிகள் கையொப்பம் போடவில்லை என்றால் சாட்சிகளாக கையொப்பம் போட்டுள்ளனார். பி ஷெட்யூல் ஐட்டம் நம்பர் **3** சர்வே நம்பர் **1012** ல் **36** செண்ட் உங்களுக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்படவில்லை இருந்தாலும் எப்படி கேட்கிறீர்கள் என்றால் எங்க அப்பாவுக்கு சொந்தமான சொத்து என்று நான் கேட்கிறேன். உங்கள் அப்பாவுடன் பிறந்த மற்ற சகோதரர்களுடன் ஏற்பட்ட வாய்மொழியான பாகப்பிரிவின்படி அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்திற்கு தனிப்பட்ட வழங்கப்பட்டதா என்றால் அவர் தனிப்பட்டா வழங்கப்படவில்லை கூட்டாக தான் பட்டா உள்ளது தனியாக பட்டா வழங்கி ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியில்லை. அந்த கூட்டு பட்ட தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாய்மொழியான பாகப்பிரிவினையின்படி தனிப்பட்டா வழங்கவில்லை கூட்டு பட்டாக உள்ளது என்று கூறுகிறீர்கள் அதனை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். வாய்மொழியான பாகப்பிரிவினைப்படி பிரதிவாதியின் தகப்பனார் தனிப்பட்ட பட்டா வாங்கி ஆண்டு அனுபவித்து வருகிறார்கள்

என்றால் சரியில்லை. உங்கள் சித்தப்பா பொன்னுரங்கம் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட வாய்மொழியான பாகப்பிரிவினை அடிப்படையில் அவர் தனி பட்டா வாங்கி அவரது மகன் பிரித்துக் கொண்டு ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் அவர்களுக்கு தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொன்னுரங்கம் சொத்து குறித்து அவரது மகன்கள் **2004** இல் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். இந்த தேதி வரை பொன்னுரங்கம் மீது அவரது வாரிசு மீது நீங்கள் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி இல்லை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் வழக்கு எண் தெரியாது. சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கின் நகல் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். உங்கள் சகோதரி தாக்கல் செய்த வழக்கின் நகல் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் அவர்களது தாய் தகப்பனுடைய சமாதி உள்ளது என்றால் சரிதான். வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியில்லை. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் உங்களுக்கு வழங்கத்தக்கதல்ல என்றால் சரியில்லை. பிரிண்ட்நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd-/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.